www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu

V12His

விருதுநகர் மாவட்டப் பொதுத் தேர்வுகள்

முதல் திருப்புதல் தேர்வு ஜனவரி 2023

வகுப்பு 12

நேரம்: 3.00 மணி **வரலாறு** மொத்த மதிப்பெண்கள் 90

## பகுதி - I

**அனைத்து விளக்களுக்கும் விடையளிக்கவும்:** **20×1=20**

1) இந்திய தேசிய காங்கிரஸை நிறுவியவர்
அ) சுபாஷ் சந்திரபோஸ் ஆ) காந்தியடிகள் இ) A.O. ஹியூம் ஈ) பாலகங்காதர திலகர்

2) இந்தியாவில் ஆங்கிலக் கல்வி எந்த ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது?
அ) 1825 ஆ) 1835 இ) 1845 ஈ) 1855

3) "சுயராஜ்யம் எனது பிறப்புரிமை. அதை அடைந்தே தீருவேன்" எனக் கூறியவர்
அ) பாலகங்காதர திலகர் ஆ) தாதாபாய் நௌரோஜி
இ) சுபாஷ் சந்திரபோஸ் ஈ) பாரதியார்

4) **கூற்று** : வ.உ.சிதம்பரம் சுதேசி கப்பல் நிறுவனத்தைத் தொடங்கினார்
**காரணம்** : இந்தியக் கடற்கரைகளில் ஆங்கிலேயர்களின் முற்றுரிமையினை அவர் எதிர்த்தார்.
அ) கூற்று மற்றும் காரணம் சரி, காரணம் கூற்றை விளக்குகிறது.
ஆ) கூற்று மற்றும் காரணம் சரி, ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.
இ) கூற்று சரி, காரணம் தவறு. ஈ) கூற்று தவறு, காரணம் சரி

5) பனாரஸ் இந்து பல்கலைக்கழகம் யாரால் நிறுவப்பட்டது?
அ) மகாத்மா காந்தியடிகள் ஆ) மதன்மோகன் மாளவியா
இ) திலகர் ஈ) பி.பி. வாடியா

6) "Indian Unrest" என்ற புத்தகத்தின் ஆசிரியர்
அ) லாலா லஜபதிராய் ஆ) வேலண்டைல் சிரோல்
இ) திலகர் ஈ) அன்னிபெசண்ட்

7) காந்தியடிகளின் அரசியல் குரு யார்?
அ) திலகர் ஆ) கோகலே இ) W.C. பானர்ஜி ஈ) M.G. ரானடே

8) முதலாவது பயணிகள் இரயில் 1853 இல் எந்த இடங்களுக்கிடையே ஓடியது?
அ) மதராஸ் - அரக்கோணம்
ஆ) பம்பாய் - பூனா
இ) கொல்கத்தா - ஹூக்ளி
ஈ) பம்பாய் - தானே

9) இந்தியாவின் மூவர்ணக் கொடி எப்போது ஏற்றப்பட்டது?
அ) டிசம்பர் 31, 1929 ஆ) மார்ச் 12, 1930
இ) ஜனவரி 26, 1930 ஈ) ஜனவரி 26, 1931

10) கல்பனாதத் எதனுடன் தொடர்புடையவர்?
அ) ஹிந்துஸ்தான் சோசலிஸ்ட் ரிபப்ளிகன் அசோசியேசன் ஆ) வங்காள சபை
இ) இந்தியக் குடியரசு இராணுவம் ஈ) இவற்றில் எதுவுமில்லை

11) **பின்வருவனவற்றைப் பொருத்தி சரியான விடையைத் தேர்வு செய்க:**

| பட்டியல் I | | பட்டியல் II |
|---|---|---|
| அ) அன்னிபெசண்ட் | - | 1. அலிகார் இயக்கம் |
| ஆ) சையது அகமதுகான் | - | 2. தயானந்த சரஸ்வதி |
| இ) கிலாபத் இயக்கம் | - | 3. பிரம்மஞான சபை |
| ஈ) சுத்தி இயக்கம் | - | 4. அலி சகோதரர்கள் |

அ) 3 1 4 2 ஆ) 1 2 3 4 இ) 4 3 2 1 ஈ) 2 3 4 1

12) மகாத்மா காந்தியடிகளின் "செய் அல்லது செத்துமடி" என எந்த நிகழ்வின் போது அழைப்புவிடுத்தார்?
அ) சட்டமறுப்பு இயக்கம் ஆ) ஒத்துழையாமை இயக்கம்
இ) வெள்ளையனே வெளியேறு இயக்கம் ஈ) இவை அனைத்தும்

13) மொழிவாரி அடிப்படையில் அமைக்கப்பட்ட முதல் மாநிலம்
அ) காஷ்மீர் ஆ) அஸ்ஸாம் இ) ஆந்திரா ஈ) ஒரிஸா

14) பூமிதான இயக்கத்தைத் தொடங்கியவர்
அ) ராம் மனோகர் லோகியா ஆ) ஜெயபிரகாஷ் நாராயணன்
இ) வினோபா பாவே ஈ) சுந்தர்லால் பகுகுணா

15) மகாத்மா காந்தியடிகள் படுகொலை செய்யப்பட்ட நாள் ..............
அ) ஜனவரி 30, 1948 ஆ) ஆகஸ்ட் 15, 1947
இ) ஜனவரி 30, 1949 ஈ) அக்டோபர் 2, 1948

16) தென்னிந்தியாவில் தன்னாட்சி இயக்கம் யாரால் துவக்கப்பட்டது?
அ) திலகர் ஆ) அன்னிபெசண்ட் இ) பி.பி.வாடியா ஈ) எச்.எஸ். ஆல்காட்

17) நவீன செயல்முறை அறிவியலின் தந்தை எனக் கருதப்படுபவர் யார்?
அ) அரிஸ்டாட்டில் ஆ) பிளாட்டோ
இ) ரோஜர் பேக்கன் ஈ) லாண்டஸ் டெய்னர்

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu



18) நியூ ஆம்ஸ்டர்டாமிற்கு ............., என மறுபெயர் சூட்டப்பட்டது.
அ) வாஷிங்டன் ஆ) நியூயார்க் இ) சிக்காகோ ஈ) ஆம்ஸ்டர்டாம்

19) பாஸ்டன் தேநீர் விருந்து நிகழ்வு ............. ல் நடைபெற்றது.
அ) 1775 ஆ) 1773 இ) 1784 ஈ) 1799

20) சூயஸ் கால்வாய் செங்கடலை ................. கடலுடன் இணைக்கிறது.
அ) ஏடன் வளைகுடாவுடன் ஆ) காம்பே வளைகுடாவுடன்
இ) மத்திய தரைக்கடலுடன் ஈ) அரபிக்கடலுடன்

## பகுதி - II

**ஏதேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 30-க்கு கட்டாயம் விடையளிக்கவும்.** **7×2=14**

21) தேசியம் என்றால் என்ன?
22) அவுரிகலகம் குறித்து குறிப்பு வரைக.
23) மிதவாத தேசியவாதிகளின் "இறைஞ்சுதல் கொள்கை" என்றால் என்ன?
24) அன்னிபெசண்ட் அம்மையாரால் வெளியிடப்பட்ட புத்தகம் மற்றும் வாராந்திரப் பத்திரிக்கையின் பெயர்களைக் கூறுக.
25) தொடக்ககால முக்கிய தேசியவாதிகளைக் கண்டறிக.
26) பசுமைப்புரட்சி என்றால் என்ன?
27) பாஸ்டன் படுகொலை பற்றி நீங்கள் அறிந்ததென்ன?
28) பண்டைய ஆட்சி முறையின் மூன்று எஸ்டேட்டுகளை விவாதிக்கவும்.
29) முதல் உலகப்போரில் பங்கு பெற்ற மைய நாடுகளின் பெயர்களை எழுதுக.
30) "ரூசோ" பற்றி குறிப்பு வரைக.

## பகுதி - III

**பின்வரும் வினாக்களில் எவையேனும் ஏழு வினாக்களுக்கு சுருக்கமான விடையளிக்கவும். வினா எண் 40-க்கு கட்டாயம் விடையளிக்கவும்.** **7×3=21**

31) மெக்காலேயின் 'இந்தியக் கல்வி குறித்த குறிப்புகளை' ஆய்க.
32) வ.உ.சிதம்பரத்தின் சுதேச இயக்க முயற்சிகள் குறித்து எழுதுக.
33) தன்னாட்சி இயக்கத்தின் இரட்டைக் குறிக்கோள்களை பற்றி எழுதுக.
34) ஜாலியன் வாலாபாக் படுகொலை குறித்து குறிப்பு எழுதுக.
35) சிட்டகாங் ஆயுதப்படைத் தாக்குதலை நடத்த சூரியாசென் எவ்வாறு திட்டமிட்டார்?
36) கலெக்டர் ஆஷ் ஏன் வாஞ்சிநாதனால் கொல்லப்பட்டார்?
37) இந்திய அரசியலமைப்பின் தனித்தன்மைகள் யாவை?
38) மறுமலர்ச்சியின் தாயகமாக இத்தாலி விளங்கியது ஏன்?
39) நேட்டோ உருவாக்கப்பட்டதின் பின்னணியைக் கண்டறியவும்.
40) இரண்டாம் உலகப் போரின் முக்கிய விளைவுகளை முன்னிலைப்படுத்துக.

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்கவும்.** **7×5=35**

41) அ) பிரிட்டிஷ் இந்தியாவில் தேசிய உணர்வு தோன்ற காரணமான சமூகப் பொருளாதாரக் காரணிகளை ஆய்க. **(அல்லது)**
ஆ) வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் போக்கினை விவாதிக்கவும்.

42) அ) இராஜாஜி திட்டம் பற்றி எழுதுக. **(அல்லது)**
ஆ) தமிழ்நாட்டில் சுதேசி இயக்கத்தின் செயல்பாடுகள் குறித்து எழுதுக.

43) அ) முதல் இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களின் சாதனைகளை மதிப்பிடுக. **(அல்லது)**
ஆ) மலபார் மாப்பிள்ளை கிளர்ச்சியின் காரணங்கள் மற்றும் துயர விளைவுகளைப் பற்றி விவாதிக்கவும்.

44) அ) இந்திய விடுதலைப்போரில் மகாத்மா காந்தியடிகளின் பங்கினை மதிப்பிடுக. **(அல்லது)**
ஆ) ஒத்துழையாமை இயக்கத்தை நடைமுறைப்படுத்தும் சூழலையும் அதன் விளைவுகளையும் விவரிக்கவும்.

45) அ) அமெரிக்க விடுதலைப் போருக்கான காரணங்கள், அதன் போக்கு, விளைவுகள் குறித்து எழுதுக. **(அல்லது)**
ஆ) தொழிற்புரட்சி ஏன் முதலில் இங்கிலாந்தில் தொடங்கிற்று? நவீன சமூகத்தின் மீது அது என்ன தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது?

46) அ) முதல் உலகப்போருக்கான காரணங்களையும், விளைவுகளையும் கணக்கிடுக. **(அல்லது)**
ஆ) **இந்திய தேசிய இயக்கம் நடைபெற்ற கீழ்க்கண்ட இடங்களை இந்திய வரைபடத்தில் குறிக்கவும்:**
(i) சௌரிசௌரா (ii) கொல்கத்தா (iii) டில்லி
(iv) வேதாரண்யம் (v) தண்டி

47) அ) இரண்டாம் உலகப்போர் ஏற்பட ஜெர்மனியும், ஹிட்லரும் எந்த அளவிற்கு காரணமானவர்கள் என்பதனை ஆய்ந்து கூறுக. **(அல்லது)**
ஆ) கி.பி. 1920 முதல் கி.பி. 1950 வரையிலான இந்திய தேசிய இயக்கத்தில் ஏதேனும் ஐந்து முக்கிய நிகழ்ச்சிகளை காலக்கோடு வரைந்து காட்டுக.

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com